R.Dis No:579/2023 Title Code No:TNTAM/24651

# திரை மொழி

THIRAI MOZHI TAMIL MONTHLY தமிழ் மாத இதழ்

| மலர் : 01 | இதழ் : 09 | ஏப்ரல் - 2024 | பக்கம்: 8 | விலை: ரூ. 10 |
|---|---|---|---|---|
| Volume : 01 | Issue : 09 | April - 2024 | Page: 8 | Price: Rs. 10 |


சினிமாவின் வெற்றிக்கான பார்முலா Page 6
ஆடுஜீவிதம் Page 2
ஏ.ஐ யில் பாட்டி வடை சுட்ட கதை Page 3

# தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கம் கடந்து வந்த வரலாறு


இயக்குநர் விக்ரமன்



இயக்குநர் பாரதி ராஜா


இயக்குநர் R.K. செல்வமணி

2024-2026 ஆம் வருடத்திற்கான தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கத்திற்கான தேர்தல் 16 மார்ச் 2024 அன்று வடபழனியில் உள்ள திரை இசைக் கலைஞர்கள் சங்கத்தில் நடந்தது.

முன்னதாக இதில் **இயக்குநர் விக்ரமன், இயக்குநர் ஆர்.கே. செல்வமணி ஆதரவு பெற்ற புது வசந்தம் அணி சார்பாக பங்கேற்று போட்டியின்றி வெற்றி பெற்றவர்கள் விவரம்: தலைவர்: R.V உதயகுமார், பொதுச் செயலாளர்: M. பேரரசு, பொருளாளர்: KV. சரண், துணைத் தலைவர்களாக K.S. ரவிக்குமார், Rஅரவிந்தராஜ், இணைச் செயலாளர்களாக A.வெங்கடேஷ், சுந்தர் C, S. எழில்.**

இந்த முக்கிய பொறுப்புகள் தவிர மீதமுள்ள பொறுப்புகளுக்கு நடைபெற்ற தேர்தலில் **புது வசந்தம் அணி**யினரே வெற்றி பெற்றனர். அவர்களின் விபரம் பின்வருமாறு:

**இணைச்செயலாளர்கள் உதவி இயக்குநர் பிரிவு: ஆரல் T மனோகர் (எ) மனோ ராமச்சந்திரன், N. ஏகம்பவாணன்.**

**செயற்குழு உறுப்பினர்கள் -இயக்குநர் பிரிவு: N.S. ரமேஷ் கண்ணா, M. ராஜ்கபூர், C.ரங்கநாதன், மனோஜ் குமார், R.மாதேஷ், இராஜகுமாரன், சரவண சுப்பையா, ராஜ்மோகன் (எ) R. கண்ணன், S பிரபு (எ) S.R. பிரபாகரன், மித்ரன் R.ஜவகர்.**

**செயற்குழு உறுப்பினர்கள் உதவி, துணை, இணை இயக்குநர் பிரிவு: A.K. நம்பிராஜன் (எ) நம்பி, சாய் ராம்கி, அசோக் அண்ணாமலை, R.சுப்ரமணிய பாரதி, T ரமேஷ் பிரபாகரன், M.முத்து வடுகு, திருமதி. இந்திரா (எ) கிளாரா.**

மேற்கண்ட அனைவரும் 17 மார்ச் 2024 அன்று இயக்குநர் சங்கத்தின் பொறுப்பாளர்களாக உயர் நீதிமன்ற வழக்கறிஞர், தேர்தல் அதிகாரி S. செந்தில்நாதன் அவர்கள் முன்னிலையில் பதவி ஏற்று கொண்டனர். இந்நிகழ்வில் தென்னிந்திய திரைப்பட தொழிலாளர்கள் சம்மேளனத் (FEFSI) தலைவர் ஆர்.கே. செல்வமணி மற்றும் பல்வேறு திரைப்படத்துறை சார்ந்த அமைப்புகளின் தலைவர்கள், மற்றும் திரைத்துறை சார்ந்த முக்கிய இயக்குநர்கள், இணை, துணை, உதவி இயக்குநர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**தற்பொழுது 2272 உறுப்பினர்களை கொண்ட தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கம் TANTIS எங்கு? எப்போது? யாரால்? எந்த பெயரால்? தொடங்கப்பட்டது** என்கின்ற வரலாற்றை இந்த நேரத்தில் நினைவு கூறுவது பொருத்தமாக இருக்கும். இனி வரலாற்றை பார்ப்போம்.

படைப்புகள் எல்லாவற்றிக்கும் படைப்பாளி ஒருவர் இருந்தால் தான் படைக்க முடியும். அதில் சினிமா என்பதும் விதிவிலக்கல்ல.

ஒன்றை உருவாக்க பல படைப்பாளிகள் ஒருங்கிணைந்தாலும் தலைமையேற்க, வழிநடத்த, ஒருவர் இருந்தே ஆக வேண்டும். அவர்தான் இயக்குநர்.


முதல் பேசும் படம் தோன்றிய 1931 முதல் 1970 வரை சினிமா பல்வேறு வடிவங்கள் பெற்று வளர்ந்தாலும் இதனை வழிநடத்திய இயக்குநர்களின் கரங்களாக செயல்பட்ட பெரும்பான்மையான உதவி இயக்குநர்களுக்கு வழங்கப்பட்ட ஊதியம், அவர்களுக்கு முழுமையான நிறைவைத் தரவில்லை.


01.08.1971-ல் உதவி இயக்குநர்கள் முறையான ஊதியம் பெறவும் அங்கீகாரமுள்ள அமைப்பாகவும் செயல்பட முடிவெடுத்து, ஒன்றிணைந்தார்கள். இதன் ஒருங்கிணைப்பாளராக, **திரு. தாசரிநாராயணராவ்** செயல்பட உதவி **இயக்குநர்கள் கவுன்சில்** உருவாக்கப்பட்டது.

இதை அறிந்த **திரு.B.S. நாராயணா** போன்ற இயக்குநர்கள் ஒன்று சேர்ந்து "உதவி இயக்குநர்கள் எப்பொழுதும் உதவி இயக்குநர்களாகவே இருந்து விட போவதில்லை. அவர்களும் நாளை இயக்குநர்கள் ஆவார்கள்." எனவே, உதவி இயக்குநர்களும், இயக்குநர்களும் சேர்ந்து, ஒரு அமைப்பை உருவாக்கலாம் என் ஆலோசனைகள் கூறினார்கள். அதன்படி **26.09.1971 இயக்குநர்கள் கவுன்சில் உருவானது.**

> தொடர்ச்சி 4ம் பக்கம்








# ஆடுஜீவிதம் ஜீவ மரண போராட்டம்

அமரர் கல்கி எழுதிய "பொன்னியின் செல்வன்" நாவலை தமிழில் பெருவாரியான வாசகர்கள் கொண்டாடுவது போல, **மலையாளத்தில் 2008ம் ஆண்டு எழுத்தாளர் "பென்யாமின்" அவர்கள் எழுதிய "ஆடுஜீவிதம்" என்ற நாவல் கொண்டாடப்பட்டு வருகிறது.**

இது, கேரளத்தில் இருந்து ஒரு புலம் பெயர்ந்த ஒரு படிப்பறிவற்ற தொழிலாளி, அரேபியா மண்ணில் தவறான சில அரபி கையில் சிக்கி நடு பாலைவனத்தில் ஆடு, ஒட்டகம் மேய்க்கும் கொத்தடிமையாக மிருக வாழ்க்கையை உழன்று, உயிரை பிடித்துக்கொண்டு தனது ஊர் திரும்பும் கதை. படிக்கும் அத்தனை வாசகர்களின் மனத்தை உருக்கி, கண்களில் கண்ணீர் அருவியை கொட்டிய கதை. சுமார் இரண்டரை லட்சம் பிரதிகளை அப்போதே கடந்து விட்ட ஒரு வெற்றி படைப்பு. **இந்த புத்தகம் வெளிவந்த போது அது அனைத்து அரேபியா நாடுகளிலும் தடை செய்யப்பட்டது.**

## இப்போது படத்திற்கு வருவோம்.

2000ம் ஆண்டுகளின் ஒரு பகுதி. இந்தியாவிலிருந்து, பஹ்ரைனில் வேலைக்கு சென்றவர், "நஜீப் முஹம்மது" என்ற ஒரு தொழிலாளி. ஒரு நிறுவனத்தில் வேலைக்கு சேரும்போது, அந்த நிறுவன ஊழியர், " இங்கு வேலை மிகவும் கஷ்டமாக இருக்கும். சிறிது யோசித்து வேலையில் சேர்" எனக்கூற, பதிலுக்கு நஜீப், தான் இதற்கு முன்பு 1990 களின் துவக்கத்தில் "சவூதி அரேபியா" வில் பார்த்த வேலையை விட கடுமையானது எதுவும் இல்லை என்று விவரிக்க, அந்த நிறுவன ஊழியர் அதை தனது நண்பரும் எழுத்தாளருமான "பென்யாமினை" தொடர்பு கொண்டு சொல்ல, அதை கேட்டு அவர் பஹரைனுக்கு பறந்து சென்று "நஜீபி"டம் ஒரு வருடமாக அவர் மறக்க முயன்ற அவரது முழு ஜீவ மரண போராட்ட கதையையும் கேட்டு, அவை அனைத்தையும் தனது எழுத்தில் 2008ம் ஆண்டு "ஆடு ஜீவிதம்" என்று நூலாக வெளியிட்டு, படித்த அனைத்து வாசகர்களின் நெஞ்சங்களையும் கனக்க வைத்து, கண்களை குளமாக்கி வடிய விட்டார். பெரு வெற்றியை பெற்ற இந்த நூல், உலகின் பல்வேறு மொழிகளில் மொழிமாற்றம் செய்யப்பட்டு, கொண்டாடப்பட்டு, **அந்த நூலின் திரைவடிவமாக ஆக்கும் முயற்சிகளை இயக்குனர் பிலஸ்சி 2008ம் ஆண்டே பென்யாமினுடன் சேர்ந்து தொடங்கி விட்டார்.** தொழில் நுட்ப கலைஞர்கள், நடிகர்கள் பிரித்விராஜ் போன்றோர்களை அப்போதே தேர்வும் செய்து விட்டார். **எந்த தயாரிப்பாளரும் இதை எடுக்க முன் வராததால், பத்து வருடங்கள் சென்ற பின்னர் நான்கைந்து வெளி நாட்டு தயாரிப்பாளர்களுடன் தானும் இணைந்து 2018 கொரோனா காலத்து முன் தொடங்கி, 28 மார்ச் 2024 அன்று திரைக்கு வந்துள்ளது.**

2004 இல் தனது முதல் அறிமுக இயக்கத்தில் **மம்மூட்டி நடிப்பில் வெளிவந்த "காழ்ச்சா", பின்னர் 2005 இல் வெளிவந்து தேசிய விருது வென்ற மோகன்லால் நடித்த "தன் மாத்ரா" போன்ற படைப்புகள் மூலம் இயக்குநர் பிலஸ்சி தனக்கென ஒரு கௌரவத்தை தக்க வைத்து கொண்டார்.**

2018 இல் "ஆடுஜீவிதம்" படப்பிடிப்பு தொடங்கிய பின், எத்தனையோ பட வாய்ப்புகள் வந்தாலும், இந்த ஒரு படத்திற்காக எதையும் ஒப்புக்கொள்ளாமல் பதினாறு வருடம், முழு அர்ப்பணிப் போடு இந்த படத்தை ஒரு உலக தரத்தில் எடுத்து வெற்றி படைத்துள்ளார். இதற்கு முன், இந்தியில் **14 வருடங்களாக எடுத்து வெளிவந்த படம் ஆசிஃப் அவர்கள் இயக்கத்தில் 1960 இல் வெளி வந்த "முகல் இ ஆசாம்" தான்.** இப்போது ஆடுஜீவிதம் அதை முறியடித்துள்ளது. இயக்குனர் ப்லஸ்ஸி கூறுகையில்,

**"இது ஒரு நஜீபின் கதை அல்ல; அது போன்ற நிலைமையில், அரேபிய மண்ணில் வேலைக்கு செல்பவர்களின் தோல்வி கதையையும் வெளி கொண்டு வந்து ஒரு விழிப்புணர்வை, மாற்றத்தை ஏற்படுத்த உறுதி பூண்டு எடுத்த படம் என்று கூறலாம்"** என்றார்.

**"என் நடிப்பை மட்டும் பாராட்டாதீர்கள்....கூட நடித்தவர்களின் அர்ப்பணிப்பையும், உறுதுணையாக இருந்த அத்தனை கலைஞர்களையும் கவனியுங்கள். என்னை விட அவர்கள் கடுமையாக உழைத்துள்ளார்கள்" என்றார் பிரித்விராஜ்.**

ஒரு தயாரிப்பாளராக மட்டுமின்றி, "இப்ராஹிம்" என்ற நல்ல கதா பாத்திரம் ஒன்றை ஏந்தி அனைவரின் இதயங்களையும் வென்ற ஜிம்மி லூயிஸ்.இப்படி, ஒவ்வொருவரும் பெரும் பணியை செய்து இந்திய திரை வரலாற்றில் ஒரு சாதனை படத்தை அளிக்க காரணம் என்று கூறலாம். அதேபோல வெறும் ரூபாய் ஐந்தாயிரம் மட்டும் முன் தொகையாக பெற்றுக்கொண்டு, எந்த வித படங்களையும் ஆறு வருடமாக ஒப்பு கொள்ளாமல் உழைத்தவர் **மேக் அப் மேன் "ரஞ்சித் அம்பாடி". அவரின் பொறுமைக்கு பரிசாக இந்த பட வேலைகள் முடிந்த பின்னர் பணியாற்றிய, பணியாற்றி கொண்டுள்ள படங்கள், ஸலார், கங்குவா, காந்தாரா 2 போன்றவை.**

## மீண்டும் கதைக்குள் வருவோம்.

இந்த படத்தில், கதைக்களம் சவூதி பாலைவனம். ஆற்று மணலை வண்டியில் ஏற்றும் ஒரு தொழிலாளி நஜீப். **அவரது புதுமண மனைவி "சாய்னு". அமலா பால் நடித்துள்ளார்.** தன் விதவை தாய் மற்றும் மனைவி சாய்னுவின் நல்ல எதிர்காலம் வேண்டி உள்ளூர் "ஏஜென்ட்" ஒருவரிடம் தனது வீட்டை வைத்து ரூபாய் முப்பதாயிரம் கொடுத்து சவூதிக்கு கூலி வேலைக்கு செல்கிறார். உடன் அவரது இளைய வயதுள்ள "ஹக்கீம்" செல்கிறார். சவுதி விமான நிலையத்தில் அவர்களை, ஒரு தவறான அரபி கூட்டி சென்று பாலைவனத்தில் ஆடு மேய்க்கும் நபர்களுக்கு தனி தனியாக கொடுத்து விடுகிறார். அங்கு அவர்கள் அந்த மந்தையில் நாள், வருடம் தெரியாமல் கொத்தடி மையாக வாழ்கிறார்கள். **அங்கு மனித உரிமைகள் அனைத்தும் குழி தோண்டி புதைத்து விட்டதால்,** ஒரு கட்டத்தில், பிரித்விராஜ் தனது தாய் மொழி மறந்து

ஆடு போலவே அவரும் தன் வாய் மொழி, உடல் மொழி மாறி உருக்குலைந்து விடுகிறார். ஒரு கட்டத்தில் தனது இளைய நண்பரான ஹக்கீமை சந்திக்க நேரும்போது ஒரு ஆப்பிரிக்க நண்பர் " இப்ராஹிம்" உதவி கொண்டு அங்கிருந்து தப்பிக்க வழி கொள்கிறார். பாலைவனத்தில் மூவரும் தப்பியோடும் போது ஏற்படும் அல்லல்கள்; அதன் பின் அவர்கள் நாடு திரும்பினார்களா என்பதுதான் கதை. இருநூற்று ஐம்பத்தி ஐந்து பக்கங்கள் கொண்ட நாவலில் வரும் காட்சி அமைப்புகள் இதில் மூன்று மணி நேரத்தில் சொல்ல முயல்வது கடினம். தனது தேவைகளை நஜீப் எப்படி பூர்த்தி செய்கிறார் போன்ற விரிவான சில காட்சிகளை இங்கு தவிர்த்து விட்டு இருக்கிறார் இயக்குனர்.

## இந்த நிலையில்,

படத்தின் நிஜமான நாயகன் ஒளிப்பதிவாளர் "சுனில்". நூல் வடிவத்தில் இருந்து காட்சி வடிவத்தில் கொணர அவர் எடுத்த விஸ்வ ரூபம் படத்தின் உயிர் நாடி. நிரந்தர வெற்றி. யாரும் நெருங்க முடியாத ஒரு எல்லை கோட்டை கடந்து விட்டு இருக்கிறார். முதல் காட்சியிலேயே மிரட்டி எடுக்கிறார். உலக அரங்கிலேயே இது போன்ற ஒளிப்பதிவு உண்டா? என யோசிக்க வைக்கிறார்.

**ஆஸ்கார் விருது பெற்ற ஒலி அமைப்பாளர் "ரசூல் பூக்குட்டி" மற்றும் இசை அமைப்பாளர், " ஏ ஆர் ரஹ்மான்" ஜோடி அடுத்த பிரமிப்பு.** ஏ ஆர் ரஹ்மானின் படங்களில் இது முதல் இடம் என்று சொன்னால் அது மிகையாக இருக்காது. மேற்கூறிய மூவரும் திரைக்கு பின்னால் அதகளப் படுத்தினர் என்றால், **"பிரித்விராஜ், கோகுல் மற்றும் ஹாலிவுட் நடிகர் ஜிம்மி லூயிஸ்" என்ற மூவரும் திரையில் வாழ்ந்து விட்டார்கள்.** சுமார் முப்பதுகிலோ எடை குறைத்து, ஒரு அடிமை நிலையை காட்ட பாலைவனத்தில் நம்மை கொண்டு செல்கிறார் பிரித்விராஜ். ஒவ்வொரு காட்சியிலும் அவரது உடல் மொழியும், பேச்சு மாறிய சப்தங்களுடன் உலாவி, இனி வாழ்வின் அனைத்து துன்பங்களும் தீர தப்பி நாடு திரும்பி குடும்பத்தோடு இணைவதுதான் என நம்பி, ஒவ்வொருமூச்சையும் போராட்டமாகவே நடத்தி உருக வைக்கிறார். ஆடு, ஒட்டகத்துடன் அவரது வாழ்க்கை பயணித்து அதே போல அவரது உடல் மொழி மாறுவது இயற்கையாக

உள்ளது. அவரது இளைய நண்பர் "ஹக்கீமாக வரும் கோகுல், நடிப்பின் அடுத்த பிரம்ம ராட்சசன். நிறைய இடங்களில் பிருத்விராஜை நடிப்பில் ஓரம் கட்டுகிறார். ஓடி ஓடி வந்து பிரித்விராஜை வாஞ்சையுடன் அணைக்கும் போதும் சரி, நம்பிக்கையை ஊட்டி மேலே நகர்வதும் சரி, பசியிலும், தாகத்திலும் துவண்டு போய் வெறி பிடித்து பாலைவனத்து மணலை வேக வேகமாக உண்டு இரத்த வாந்தி எடுப்பதிலும் சரி... காண்பவர்களை கதற விடுகிறார். மூன்றாவதாக ஜிம்மி லூயிஸ்.

ஆப்பிரிக்க நண்பர் "இப்ராஹிமாக', வழிகாட்டியாக இவர்களுடன் சேர்ந்து அவர் நடத்தும் தியாக போராட்டங்கள், வலிமையான தன் உடல் வாகுவை இவர்களுக்காகவே அர்ப்பணித்தது போதாதென்று, தனது ஆடை, காலணி, உடை என சகலமும் கொடுத்து இறுதியில் தாகத்தினால், மரணத்தருவாயில் இருக்கும் ஹக்கீமுக்கு தன் கண்ணீரை துடைத்து வாயில் நனைப்பதாகட்டும், மண்டியிட்டு இரு கரம் ஏந்தி இறையை தொழுவதாகட்டும்...ஒரு இறையாகவே வாழ்ந்து இருக்கிறார்.

**இடையில், ஹக்கீம், "பெரியோனே என்ரஹ்மானே....பெரியோனே ரஹீம்"....என இரு வரிகளை மெலிதாக பாடும்போது இதயத்தை கரைய வைக்கிறார்.** முழுப்பாடல் கடைசியில் வருகிறது. ரபீக் முஹம்மதுவின் வரிகளில், ஜிதின் ராஜ் குரலில் கண்ணீர் பெருக்கெடுக்கிறது. புது விதமான பல்லவி, அனுபல்லவி, சரண அமைப்புகள் தொடுத்து இப்போது அதிகம்" "ஷார்ட்ஸ்" களில் அதுவும் பெண்கள் பாடும் பாடலாக உலா வருகிறது. படத்தில் வரும் பாலைவன புயல், பாம்புகள் என நிஜத்தையே கொண்டு வந்து மிரட்டுகிறார்கள். மெதுவாக நகரும் திரைக்கதையை தாங்கி பிடிக்கும் வலுவான காட்சி அமைப்பு இருக்கையை விட்டு அகலாமல் இருக்க செய்கிறது. இரண்டாம் பகுதியில் வரும் காட்சி அமைப்புகள் அதிக கரவொலிகளை பெறுகிறது. குறிப்பாக பிரித்விராஜ் கடைசியில் மயங்கி விழும்போது அவர் கையில் இருந்து நழுவி உருண்டு ஓடும் குளிர்பான பாட்டில் நிற்கும் இடம். எழுந்து நின்று கை தட்டும் இடம். இறுதியில் எங்கு நிறுத்த வேண்டுமோ, அங்கு படத்தை நிறுத்தி திரைப்பட ரீதியில் கொண்டு செல்லாமல் இயல்பாக முடித்து மனம் கவர்கிறார் இயக்குனர் பிலஸ்ஸி. தனது முழு தவத்திற்கும், உழைப்பிற்கும் இந்த படம் ஒரு சிறந்த அங்கீகாரத்தை அவருக்கு கொடுக்கும். இது "ஆர்ட் ஃபிலிம்" வகையை சேர்ந்தது. அதில், உலக அரங்கில் இந்திய திரையின் தரத்தை எடுத்து சென்று பெருமை சேர்க்கும் விதமாக படம் எடுத்து சாதித்த ஒட்டு மொத்த படக்குழுவை எழுந்து நின்று பலத்த கரவொலியுடன் மரியாதை செலுத்த கடமை பட்டுள்ளோம். 2024ம் ஆண்டு மலையாள திரையின் ஆதிக்கம் தொடர்கிறது. நல்ல கருவுள்ள படங்களை தொடர்ந்து அளித்து வரும் அவர்களுக்கு நமது நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள். "ஆடு ஜீவிதம்" காட்சியமைப்பின் இலக்கணம்.



- கிருஷ்ணன் இரவிசங்கர்
கட்டுரையாளர்

தொடர்புக்கு
நிர்வாக ஆசிரியர் N.மூர்த்தி
9500074478

# ஏ.ஐ யில் பாட்டி வடை சுட்ட கதை

-ISR **செல்வகுமார்** - ஏ.ஐ நிபுணர், திரைப்பட இயக்குநர்

அடுத்த பாராவை நிச்சயமாக நீங்கள் படிக்க முடியாது. வேண்டுமென்றே வார்த்தைகளை கலைத்துப் போட்டிருக்கிறேன். ஏ.ஐ பற்றிய அச்சம் மற்றும் தெளிவு பற்றி இந்தப் பாராவில் இருக்கிறது. கலைந்த வார்த்தைகளை அடுக்கித்தரும்படி chatGPT மற்றும் ஜெமினி ஏ.ஐ ஆகிய இரு செயலிகளிடமும் கொடுத்தேன். அழகாக அடுக்கிக் கொடுத்துவிட்டன. அவை அடுக்கிக் கொடுத்த பாராதான் இந்தக் கட்டுரையின் கடைசி பாரா. தானே அடுக்கிப் படிக்க முயல்பவர்கள் அடுத்த பாராவுக்கும், பொறுமையில்லாதவர்கள் கடைசிப் பாராவுக்கும் தாவலாம்.

இனிமேல்தான் போன்ற சொல்றத ஏ.ஐகள் பார்த்தால் நாங்கள்லாம் தேவையே நீங்க இல்ல போலருக்கே, என்றார் பாண்டியராஜன்.

உங்களைப் தேவை அதிகம் காட்சிகளையும் தேவைப்படும். தீர்மானிக்கக் கூடிய நீங்கள்தான் உருவாக்கும் இந்த அச்சமே கதைகளையும், படைப்பாளிகளின் தேவையா இல்லையா எனத் இடத்தில் இருப்பீர்கள். எனவே இயக்குநர் வேண்டாம் என்றேன் நான்.

சார்! அடுத்த வகுப்பில் பிராக்டிகல்ஸ் குறைவாக இருக்கட்டும். தகவல்கள் அதிகம் இருக்கட்டும் என்றார்கள், லிபா மாணவர்கள். டெலிவிஷன் மேனேஜ்மெண்ட் பற்றி வகுப்பெடுப்பதற்காகச் சென்றிருந்தேன். பாட்டி வடை சுட்ட கதையில் எல்.கே.ஜித்தனமாக ஆரம்பித்து, அதை எப்படி விசுவலாக யோசிப்பது என கேள்விகேட்டேன். அதற்குப் பின்தான் கதை எந்த ஊரில் நடக்கிறது, பாட்டியின் வறுமையானவா, அவருடைய புடவை கிழிசலா, வடைக் கடையைச்சுற்றி அமர்ந்திருக்கும் வெட்டி பாய்ஸ் என்ன செய்கிறார்கள், அங்கு சுற்றித் திரியும் கன்றுகுட்டிகள், நாய்க் குட்டிகள் என்ன நிறம்? காக்கா ஏன் வடையை திருட வந்தது. பசியா? தினசரி பொழுதுபோக்கா? நரி எங்கிருந்து வந்தது? பொந்திலிருந்தா? யாராவது துரத்தி வந்து சேர்ந்ததா? என விதவிதமான கேள்விகளை அவர்களே எழுப்பி அவர்களே பதில் சொல்ல வைத்தேன்.




விறகடுப்பு, தீப்பெட்டி, வடைசட்டி, வடை மாவு, சுற்றிக் கிடக்கும் பழுத்த இலைகள், பாட்டியின் உடை, ஊர் பெயர் பலகை, வெட்டி பாய்சின் கைகளில் உள்ள பீடிக்கட்டு, தினத்தந்தி என தேவையான பொருட்களை பட்டியலிட வைத்தேன்.

அப்பொருட்களின் விலை என்ன? அவற்றை யார் வாங்கி வைப்பார்கள்? யார் யாருக்கு என்னென்ன பொறுப்பு? பட்ஜெட்டுக்குள் முடிப்பது எப்படி என அவர்களை பல கேள்விகள் வழியாகத் தூண்டி, யோசிக்க வைத்து, முடிவெடுக்க உதவினேன்.

பிறகு பல்வேறு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் வடிவங்களை எடுத்துச் சொல்லி ஒவ்வொன்றுக்கும் எப்படி தயாராவது என அவர்களே புரிந்து கொள்ளும் வகையில் உரையாடல் பாணியில் வகுப்பை நடத்தினேன். இரண்டு நாள் வகுப்பில் இருபது வயது குறைந்தது போல உணர்ந்தேன். என்னிடமிருந்து அவர்களும், அவர்களிடமிருந்து நானும் கற்றுக் கொண்டதில் ஏ.ஐயும் இருந்தது. பட்டென ஒரு க்விஸ் நிகழ்ச்சியை ஏ.ஐ உதவியுடன் வடிவமைத்து, செல்ஃபோன் பயன்படுத்தி படப்பிடிப்பும் நடத்திவிட்டார்கள். அந்த வகுப்பில் சில திறமைசாலிகளை என்னால் அடையாளம் காண முடிந்தது. நிச்சயமாக அடுத்த ஐந்து வருடங்களுக்குள் அவர்களில் ஒரு மாணவன் அல்லது மாணவியாவது சினிமா, தொலைக்காட்சித் துறைகளில் குறிப்பிடத்தகுந்த இடத்திற்கு வந்துவிடுவார்கள்.

திரும்ப வரும்போது பென் டிரைவை வகுப்பறையிலேயே மறந்துவிட்டேன். இதுநாள் வரையில் அந்த பென் டிரைவில் என்ன இருந்தது என்பது நினைவில் இல்லை. தற்போது அத்தனை ஃபைல்களும் ஞாபகம் வந்துவிட்டது. அடுத்த வாரம் வகுப்பை தொடங்கும்போது பென் டிரைவ் திரும்பக் கிடைக்குமா? இல்லையா? என்ற சஸ்பென்ஸ் நன்றாக இருக்கிறது.

இம்மாத சென்சேஷன் Sora AI தான். நான் ஐந்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த சமயம். பேய் கதைகள் உலாவந்து கொண்டிருந்த நேரம். வடபழனி கல்மண்டபம் கோணிக்கடை எதிரில் தெருவில் கிடந்த ஒரு அம்மியும், உலக்கையும் நடந்தே திருவொற்றியூர் சென்றதாக வதந்திகள் பரவிக் கொண்டிருந்தது. பேங்கில் வேலை செய்து கொண்டிருந்த மாமா அவ்வப்போது பத்துப் பதினைந்து சிறுவர்கள் சூழ, அவர்களுக்கு கதை சொல்வார். அவர் சொல்வது எல்லாமே திகில் கதைகள்தான். அவர் சொன்ன கதைகளில் ஒன்றுதான் வடசென்னையை அலறவிட்ட அம்மியும், உலக்கையும் நடந்து சென்ற கதை. அவர் சொல்லும்போது ஒவ்வொரு தெருவும் அப்படியே படமாக கண் முன் விரியும். நள்ளிரவில் நடுங்கும் வீடுகளும், அதற்குள்ளிருந்து பயத்துடன் எட்டிப் பார்க்கும் மனிதர்களும் இன்னமும் என்னால் மறக்க முடியவில்லை. நிஜமாகவே அம்மிக்கல்லும், உரல் இல்லாத உலக்கையும் நடந்து சென்றது போல அந்தக் காட்சி எனக்குள் உறைந்துவிடக்கிறது.

சமீபத்தில் இயக்குநர் பாண்டியராஜன் அவர்களை மீண்டும் சந்தித்தேன். அது எதற்கான சந்திப்பு என்பதை அடுத்த கட்டுரையில் சொல்கிறேன். இப்போதைக்கு எங்களுக்குள் நடந்த ஏஐ பற்றிய உரையாடலின் சிறு பகுதியை மட்டும் இப்போது சொல்கிறேன்.

"நீங்க சொல்றத பார்த்தால் நாங்கள்லாம் தேவையே இல்ல போலருக்கே", என்றார் இயக்குநர் பாண்டியராஜன். "உங்களைப் போன்ற படைப்பாளிகளின் தேவை இனிமேல்தான் அதிகம் தேவைப்படும். நீங்கள்தான் ஏ.ஐகள் உருவாக்கும் கதைகளையும், காட்சிகளையும் தேவையா இல்லையா எனத் தீர்மானிக்கக் கூடிய இடத்தில் இருப்பீர்கள். எனவே இந்த அச்சமே வேண்டாம்" என்றேன் நான்.

1ம் பக்கம் தொடர்ச்சி



இயக்குநர் தாசரி நாராயணராவ்

அப்போது அனைத்து மொழி இயக்குநர்களும் சென்னையிலேயே அதிகம் இருந்ததால் தலைவர் திரு. B.S.நாராயணா அவர்களின் ஆலோசனையின் பேரில் **"தென்னிந்திய திரைப்பட இயக்குநர்கள் சங்கம்" என்று 02.05.1972 அன்று நடைபெற்ற பொதுக்குழுவில் முடிவு செய்யப்பட்டு பெயர் மாற்றம் செய்யப்பட்டது.**

இந்நிலையில் 1978-ம் ஆண்டில் உறுப்பினர் அல்லாத இயக்குநர்களின் உதவியுடன் **"பிலிம் டைரக்டர்ஸ் கவுன்சில்"** என்று ஒரு புதிய அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அதை தொடர்ந்து அவர்களால் நடத்த முடியாமல் போய்விட்டது.

1981-ம் ஆண்டில் திரைப்படத் துறையின் அனைத்து தொழிலாளர்களையும் ஒன்றிணைத்து SAFE என்ற அமைப்பு சேம்பர் வளாகத்தில் தொடங்கப்பட்டது. அதிலும் சில இயக்குநர்கள் சேர்ந்தார்கள்.

ஆனால் தென்னிந்திய திரைப்பட இயக்குநர்கள் சங்கம் திரு.தாசரி நாராயணராவ் அவர்கள் தலைமையில் ஒரு வலுவான அமைப்பாகவும், தென்னிந்திய திரைப்பட தொழிலாளர்கள் சம்மேளனத்திற்கு ஒரு வழிகாட்டும் அமைப்பாகவும் திகழ்ந்ததால் 1975 முதல் 1986 வரை அவரது தலைமையில் சிறப்பான அமைப்பாக செயல்பட்டு வந்தது.


இயக்குநர் R.C. சக்தி

1978-ம் ஆண்டு 7-வது ஆண்டு விழா நடத்தப்பட்டு, விழாமலர் வெளியிடப்பட்டது.

1986-ம் ஆண்டு சங்கத்தின் 15.ம் ஆண்டு விழா நடத்தப்பட்டது. இதில் அன்றைய **ஆளுநர் குரானா** அவர்கள் கலந்த கொண்டு சிறப்பித்தார்கள். இந்த விழாவில் **இயக்குநர் பாரதிராஜா, அவர்கள் பதினைந்து மூத்த இயக்குநர்களின் உருவப்படங்களை திறந்து வைத்தார்.**

நமது சங்கம் 1974-ம் ஆண்டு முதல் 1991-ம் ஆண்டு வரை எண். 2, கோபால கிருஷ்ணன் தெரு திநகர் சென்னை 600 017 என்ற முகவரியில் இயங்கியது. இந்த அலுவலககட்டிடம் புகழ்பெற்ற **வீணை வித்வான் வீணை சிட்டிபாபு**வுக்குச் சொந்தமானது.

1991-ம் ஆண்டின் இறுதியில் அன்றைய நிர்வாகிகள் **இயக்குநர் ஜி.எம்.குமார்** தலைமையில் **ஏவி.எம். முருகன்** உள்ளிட்ட நிர்வாகிகள், வடபழனி பஸ் நிலையம் அருகே முதன் முறையாக இயக்குநர் சங்கத்திற்கென்று சொந்தமாக ஒரு அலுவலகம் வாங்கினார்கள். (இதற்கான நிதி திரட்டும் போது, அதுவரை தான் பெற்ற வாடகை முழுவதையுமே நமது சங்கத்திற்கு நன்கொடையாக கொடுத்து உதவியவர், மதிப்பிற்குரிய வீணை வித்வான் திரு. சிட்டிபாபு அவர்கள்)

இந்த காலகட்டங்களில் இயக்குநர்கள் மட்டும் அல்லாது அனைத்து திரைப்பட துறையினரும் தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஆகிய மொழிப்படங்களை அந்தந்த மாநிலங்களிலேயே தயாரிக்க தொடங்கி விட்டனர். **அனைவரும் இடம் பெயர்ந்த சூழ்நிலையில் பாலசந்தர், பாரதிராஜா, மணிரத்னம் போன்ற முன்னணி இயக்குநர்கள் தமிழுக்கென்று ஒரு அமைப்பை உருவாக்கும் பொருட்டு முதலில் தமிழ் திரைப்பட இயக்குநர்கள் சங்கம் என்பதை ஏற்படுத்தினார்கள்.** இது பதிவு செய்யப் படாத அமைப்பாக இருந்தது இந்நிலையில் **1997ஆம் ஆண்டு மே மாதம் ஒட்டு மொத்த இயக்குநர்கள் முன்னின்று. தமிழ் திரைப்பட படைப்பாளிகள் மற்றும் தொழிலார்கள், சம்மேளனம் என்று ஆரம்பித்தனர்.**

இதில் திரைப்படத்துறையை சேர்ந்த அனைத்து சங்கங்களுக்கும், இயக்குநர்கள் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டு, ஒன்றரை ஆண்டு காலம் சிறப்பாக செயல்பட்டது.

**தமிழ் சம்மேளனத்தின் கௌரவத் தலைவராக திரு பாலசந்தர் அவர்களும், தலைவராக திரு. பாரதிராஜா அவர்களும், செயலாளராக திரு.ஆர்.கே.செல்வமணி அவர்களும், பொருளாளராக திரு. வி.சேகர் அவர்களும் மற்ற முன்னணி இயக்குநர்கள் அனைவரும் முக்கிய பொறுப்புகளிலும் நியமிக்கப்பட்டார்கள்.**

இதில் இடம் பெற்ற இயக்குநர் சங்கத்துக்கு **தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கம் என்று பெயரிடப்பட்டது.** இதற்கான தீர்மானம் 30.08.1997 அன்று வாணி மஹாலில் நடைபெற்ற பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்டது.

1997-1998-ம் ஆண்டுகள் திரைப்படத்துறையினருக்கு ஒரு போராட்ட காலகட்டமாக இருந்தாலும், இயக்குநர்கள் தான் சினிமாவை தீர்மானிக்கும் சக்தி என்பதை திரைத்துறையினருக்கும், திரை ரசிகர்களுக்கும் உணர்த்தியது.


இந்நிலையில் தொழிலாளர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் வேண்டுகோளுக்கிணங்க, தமிழ்நாடு திரைப்பட சம்மேளனத்தில் உள்ள அனைத்து சங்கங்களும் முன்னர் இருந்த தென்னிந்திய திரைப்பட தொழிலாளர்கள்சம்மேளனத்துடன்இணைப்பது என்றும், பின்னர் அவை தமிழ் திரைப்பட தொழிலாளர்கள் சம்மேளனமாக பெயர் மாற்றம் செய்யப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. இதற்கான ஒப்பந்தம் **அன்றைய முதல்வராக இருந்த திரு. மு.கருணாநிதி முன்னிலையில் நடந்தது.**

தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கம் முழுமையாக நமது தென்னிந்திய திரைப்பட இயக்குநர்கள் சங்கத்தில் இணைக்கப்பட்டது. அப்போது திரு.பாலசந்தர் தலைவராகவும், திரு.பாரதிராஜா செயலாளராகவும் இருந்தார்கள். அதன் பின் 2000-ம் ஆண்டில் திரு.பாரதிராஜா தலைவராகவும், திரு.ஆர்.கேசெல்வமணி பொதுச்செயலாளராகவும் திரு.வி.சேகர் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.


இயக்குநர் V சேகர்

தொழிலாளர் சம்மேளனமும், அதில் இணைந்திருந்த சங்கங்களும் பெயர் மாற்ற காலதாமதம் ஏற்பட்டதால் அதற்கு முன்னோடியாகவும், தங்கள் கொள்கையில் மாறாமலும் இருந்த நமது சங்க உறுப்பினர்கள் 20.08.2000 அன்று தென்னிந்திய வர்த்தக சபை கட்டிடத்தில் நடந்த பொதுக்குழு கூட்டத்தில், **29 ஆண்டுகளாக 'தென்னிந்திய திரைப்பட இயக்குநர்கள் சங்கம்' என்ற பெயரில் இயங்கி வந்த நமது சங்கத்தை "தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கம்", என்று பெயர் மாற்றம் செய்தார்கள்.**

இந்நிகழ்விற்குப் பின் இயக்குநர்கள் தங்கள் எண்ணங்களை பகிர்ந்து கொள்ளவும் உறுப்பினர்கள் நமது சங்கத்தின் நிகழ்வுகளை தெரிந்து கொள்ளவும், **சங்கத்தின் சார்பாக பொதுச் செயலாளர் ஆர்.கே.செல்வமணி அவர்களை ஆசிரியராகக் கொண்டு, தமிழ்த்திரை என்ற மாத இதழ் ஆரம்பிக்கப்பட்டது.**


இயக்குநர் G.M.குமார்

பொது மக்களின் பிரச்சனைகளுக்காக இயக்குநர்கள் குரல் கொடுத்தாலும், **ஒட்டு மொத்த சங்கங்களும் இணைந்து நடத்திய நெய்வேலி போராட்டத்துக்கு நமது சங்கம் தலைமையேற்று நடத்தியது பெருமை கொள்ளத்தக்கது.**


கும்பகோணம் பள்ளியில் தீ விபத்து நடந்த போதும், சமூக அக்கரையுடன், நமது சங்கம் அந்த துயர சம்பவத்தில் பங்கெடுத்தது. இதே போல் ஈழப் பிரச்சினைக்காக, இராமேஸ்வரம் போராட்டத்தையும், தென்னிந்திய வர்த்தக சபையில் நடந்த உண்ணா விரத போராட்டத்தையும் தலைமையேற்று நடத்தியது. இதே கால கட்டத்தில் **இயக்குநர் சங்கத்தின் அறக்கட்டளையும், திரு.பாரதிராஜா அவர்கள் தலைமையில், எஸ்.ஏ.சந்திரசேகர், ஆர்.சி. சக்தி, பாலு மகேந்திரா, ஆர்.கே.செல்வமணி, வி.சேகர், சித்ரா லட்சுமணன் ஆகியோரை கொண்ட நிர்வாகக் குழு ஆரம்பிக்கப் பட்டது.**


இயக்குநர் அமீர்


முன்னணி இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள் நிதி உதவியுடன் அறக்கட்டளை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. சாதனை படைத்த மூத்த இயக்குநர்களுக்காக, கே.எஸ்.கோபால கிருஷ்ணன். ஏ.சி.திருலோகச்சந்தர், முக்தா சீனிவாசன், பானுமதி, பி.மாதவன் ஆகியோருக்கு 2001-ம்




இயக்குநர் K.பாலசந்தர்



இயக்குநர் மணிரத்னம்



இயக்குநர் S.A.சந்திரசேகர்



இயக்குநர் பாலுமகேந்திரா

ஆண்டில் மிகச்சிறப்பான முறையில் பாராட்டு விழா நடத்தப்பட்டது.

மூன்று நாட்கள் தொடர் சிறப்பு பொதுக்குழு கூட்டங்களும் நடத்தப் பட்டு, தமிழ்திரை என்ற இயக்குநர் சங்க மாத இதழும் வெளியிடப் பட்டது.



இயக்குநர் RV உதயகுமார்

**2008-ல் பாரதிராஜா, ஆர்கே செல்வமணி, ஆகியோரின் தலைமை யில் பொறுப்பேற்ற நிர்வாகக்குழு இயக்குநர்கள் சங்கத்தின் 40-ஆம் ஆண்டு விழாவை கொண்டாடும் வகையிலும், தமது சங்கத்திற்கு புதிய இடம் வாங்க, நிதி திரட்டும் நோக்கத்துடனும் D40 என்ற பிரம்மாண்ட கலை நிகழ்ச்சியை 2010-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 23-ம் தேதி நேரு உள்விளையாட்டு அரங்கில் நடத்தியது.**

2011-ல் இயக்குநர்கள் திரு. பாரதிராஜா, திரு. அமீர் ஆகியோரின் தலைமையிலான நிர்வாகக்குழு நமது சங்கத்தில் ஏற்கனவே D40 மூலம் சேகரித்த நிதியை கொண்டு தற்போது நமது சங்கம் இயங்கி வரும். 168, அந்தோணி சாலை, ஸ்ரீதேவி கருமாரி அம்மன் நகர், வளசரவாக்கம், சென்னை-600 087 என்ற முகவரியில் உள்ள கட்டிடத்தை வாங்கி செப்பனிட்டு, சிறப்பான ஒரு அலுவலகமாக மாற்றிக் கொடுத்தது.

**2013ல் இயக்குநர்கள் திரு. விக்ரமன், திரு. ஆர்.கே.செல்வமணி ஆகியோரின் தலைமையில் பதவி யேற்ற, நமது சங்க நிர்வாகக் குழுவினர் மருத்துவக் காப்பீடு, குறைந்த செலவில் உருவாகும் படங்களுக்கு ஒத்துழைப்பு, உறுப்பினர்களின் ஊதிய நிர்ணயம் போன்றவற்றை சிறந்த முறையில் செய்து, சங்கத்தை மேலும் வளர்ச்சி பாதையில் இட்டு சென்றனர்.**

**அவர்களே தொடர்ச்சியாக கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக இயக்கு நர் சங்கத்தை ஒரு குடும்ப உறவு போல் பாவித்து பயணித்துக் கொண்டிருக்கும் சங்கமானது உறுப் பினர்களுக்கு, கல்வி உதவி, மருத்துவ உதவி, திருமண பரிசு, கல்லூரி, பள்ளிகளில் இலவச சீட், ஓய்வூதியம், தீபாவளி பொங்கல் பண்டிகைகளுக்கு புத்தாடையுடன் பரிசு, மேலும் இயற்கை எய்திய உறுப்பினர்களின் குடும்பத்திற்கு ரூபாய் 50,000 நிதி உதவி, கொரோனா நோய் தாக்கிய காலகட்டத்தில் மருத்துவ உதவி, பொருள் உதவி செய்து உறுப்பினர்களுக்கு ஓர் அரணாக இருந்தது இயக்குநர்கள் சங்கம் நமது உறுப்பினர்களில் 60க்கும் மேற்பட்டோருக்கு குறும்பட இயக்க வாய்ப்பு கொடுத்து தேர்வு செய்யப்பட்ட குறும்படங்களுக்கு சிறப்பு பரிசு வழங்கி பாராட்டியது, இப்படி தொடர்ந்து பல்வேறு நலத்திட்டங்களை செய்து வருகிறது.**

இப்படி, அரை நூற்றாண்டுகளை கடந்து சாதனை படைத்த இயக்கு நர்களால் சரித்திரம் படைத்து கொண்டு இருக்கும் **இயக்குநர்கள் சங்கம் தற்பொழுது பதவி ஏற்றுக் கொண்ட தலைவர் RV உதயகுமார், பொதுச் செயலாளர் M. பேரரசு அவர்களும் உடன் பதவி ஏற்று கொண்ட மற்ற பொறுப்பாளர்களும் மேலும் சங்கத் தை வெற்றிகரமாக நடத்தி செல்ல வாழ்த்துகிறது திரை மொழி சினிமா மாத இதழ்.**



இயக்குநர் பேரரசு

திரை மொழி TALKIES

Thiraimozhi Talkies

நன்றி - இந்திய சினிமா நூற்றாண்டு விழா சிறப்பு மலர். TANTIS



2024–2026ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கத் தேர்தலில் வெற்றிப்பெற்ற நிர்வாகிகள் பதவியேற்ற போது...







# சினிமாவின் வெற்றிக்கான பார்முலா

தமிழ் சினிமாவில் ரஜினி, கமல், விஜய், அஜீத், சூர்யா, விக்ரம், விஷால், சிவகார்த்திகேயன், கார்த்தி, விஜய் சேதுபதி, ஜெயம் ரவி, தனுஷ், சிம்பு, பிரபுதேவா, சசிகுமார், மாதவன், சித்தார்த்,

விஜய் ஆண்டனி, எஸ்.ஜே.சூர்யா, அருள்நிதி, அருண்விஜய், ஹரிஸ் கல்யாண், ஜி.வி.பிரகாஷ், துல்கர் சல்மான், ஆர்யா, விக்ரம்பிரபு, பரத், அதர்வா, ஜீவா, அசோக் செல்வன், ராகவா லாரன்ஸ், சுந்தர். சி, பார்த்திபன்,சமுத்திரகனி, விஷ்ணு விஷால், கௌதம் கார்த்திக், துருவ் விக்ரம், ஜெய், விமல்,விதார்த், மிர்ச்சி சிவா, சிபி சத்யராஜ், சேரன்,அமீர்,ஸ்ரீ காந்த்,நட்டி,வைபவ்,கதிர்,நகுல்,சதீஷ்,வெற்றி, மணிகண்டன்,சூரி,கவின்,




அட்டக்கத்தி தினேஷ், பிரதீப் ரங்கநாதன்,ஹிப்ஹாப் ஆதி, வடிவேல், சந்தானம்,யோகிபாபு, ஆர்ஜே. பாலாஜி, ஜித்தன் ரமேஷ், ரவி கிருஷ்ணா,கலையரசன்,அர்ஜீன்தாஸ், அஸ்வின்,காளிதாஸ் ஜெயராமன், சாந்தனு பாக்யராஜ், ஸ்ரீ, ரியோ, பிரஜன் இந்த ஹீரோக்கள் மட்டுமின்றி நயன்தாரா, கீர்த்தி சுரேஷ், ஐஸ்வர்யா ராஜேஷ், த்ரிஷா,அனுஷ்கா ஷெட்டி, வரலட்சுமி சரத்குமார், ஆன்ட்ரியா, என ஹீரோயின் சார்ந்த படங்கள் என, வருடத்திற்கு சுமார் 50 திரைப் படங்கள் மேல் கதாநாயகன் மற்றும் நாயகியை மட்டுமே மையமாகக் கொண்டு தயாராகிறது.

ஆனால் ஆண்டுதோறும் 400 படங்கள் தயாரிக்கப்பட்டு, அதில் சுமார் 250 படங்கள் ரிலீஸாகின்றன. மீதி 150 படங்கள் பல்வேறு காரணங்களால் ரிலீஸாகாமல் hard discல் முடங்கிப் போகிறது. இந்த 400 திரைப்படங்கள் மட்டுமின்றி தயாரிப்பில் படம் முழுமையடைந்தோ, முழுமையடையாமலோ பல்வேறு காரணங்கள் மற்றும் சூழல்களால்கிடப்பில்கிடக்கும்படங்களின் கதை தனி.

மேற்கண்ட 50 கதாநாயர்களில் வியாபாரம் உள்ள நாயகர்கள் எத்தனை பேர் இருப்பார்கள்? சுமார் 30 பேருக்கு பிஸினஸ் இருப்பதாக (ஒரு பேச்சுக்கு) வைத்துக்கொள்வோம். தயாராகும் 400ல் 30 படங்கள் மட்டுமே பிஸினஸாகும் என நம்பி எடுக்கப்பட்ட ஹீரோ அல்லது ஹீரோயின் படங்களெனில், மேற்கொண்டு தயாரிக்கப்படும் திரைப்படங்களில் 370 படங்களுக்கும் ஹீரோ கிடையாது.

“கதை தான் அந்த படங்களின் ஹீரோ”... என்பது சரிதானே?

அப்படின்னா ஹீரோ படம்னா கதை வேணாமான்னு கேட்கக் கூடாது. எவ்வளவு பிஸினஸ் இருக்கிற ஹீரோவாக இருந்தாலும், எவ்வளவு மாஸ் இருக்கிற ஹீரோவாக இருந்தாலும் நல்ல கதை வேண்டும். இல்லையென்றால், என்ன நடக்குமென்று எல்லாருக்கும் தெரியும். பல பிரபல நாயகர்கள் படங்களில் கதை இல்லாமல் ஓவர் பில்டப் செய்துவிட்டு மாட்டிக்கொண்ட கதைகளை பார்த்துவருகிறோம்.

அப்படியானால், எடுக்கப்படும் அத்தனைப் படங்களிலும் கட்டாயம் நல்ல கதை இருக்க வேண்டும் அல்லவா?.... இருக்கிறதா?

6 கோடி ரூபாயை செலவு செய்து எடுக்கப்படும் ஒரு நடுத்தர பட்ஜெட் படத்தின் கதை விவாதத்திற்கு எத்தனை லட்சம் செலவு செய்திருப்பார்கள்?

6 லட்சம் கூட செலவு செய்திருக்க மாட்டார்கள்...

இப்போதெல்லாம் பெரும்பான்மையான தயாரிப்பாளர்கள் கதைக்கு செலவு செய்வது இல்லை. கதையை தயார் செய்வதும் அதை சொல்லி ஹீரோவிடம் கால்சீட் வாங்குவதும் டைரக்டருடைய வேலை. ஹீரோ கால்சீட் கிடைச்சா அதை வைத்து படம் எடுத்துவிடலாம், ஹீரோ மார்க்கெட் பிளஸ் டைரக்டர் மார்கெட்டும் சேர்ந்தா படம் பிஸினஸ் ஆயிடும். லாபம் கிடைத்துவிடும் என தப்புக் கணக்குப் போட்டு மாட்டிக் கொள்கிறார்கள்.

1980,90களில் படத்தின் கதையை முதலில் தயாரிப்பாளர் முடிவு செய்வார். இந்த கதை ஜெயிக்கும், நம் பட்ஜெட்டில் இந்த கதை அடங்கும் என தீர்மானித்து படமெடுத்து வெற்றி பெற்று லாபம் ஈட்டினர்.. படம் தோற்றே போனாலும், பெரிய நஷ்டமில்லாமல் அடுத்த படம் எடுத்தார்கள். இன்று ஹீரோக்களை நம்பி தயாரிப்பாளர்கள் படமெடுக்கிறார்கள். தயாரிப்பாளர் தனக்கு கிடைக்க வேண்டிய லாபத்தையும் ஹீரோவிற்கே சம்பளமாகவே தந்து நஷ்டமடைகிறார்கள்.

கதைக்காக செலவு செய்யாத, தேர்வு செய்ய மெனக்கெடாத தயாரிப்பாளருக்கு, கதை உரிமம் மட்டும் வேண்டும். படம் ஹிட்டானால் தெலுங்கு, ஹிந்தி, மலையாளம், கன்னடம் என பல கோடிக்கு போகும் ரைட்ஸ் வேண்டும். அதுவும் முதல் பட இயக்குநர் எனில் ரைட்ஸ் மொத்தமும் எழுதி கேட்பார்கள்.

ஆனால் கதைக்கு செலவே செய்ய மாட்டார்கள்.

கதை விவாவாதம் நம்ம ஊர்ல சினிமாவின் தொடக்க காலத்தில் இருந்தது. இடையில சில பேரு நான் தனியா கதை பண்ணேன் என்று சொல்லி ஜெயிக்கும் போது அதையே உதாரணமாக சொல்லத் தொடங்குனாங்க.

முன்பெல்லாம் தயாரிப்பாளரே கதை இலாகா என்று ஒன்றை வைத்திருப்பாளர்கள். பல எழுத்தாளர்கள், இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள் அதில் இருப்பர். அந்த கதை இலாகாவில் உள்ளோர் கதையை சேர்ந்து உருவாக்குவார்கள் அல்லது தயாரிப்பாளர் தேர்வு செய்யும் கதையை சரி செய்வார்கள். எழுத்தாளர்களை நம் தயாரிப்பு முன்னோடிகளும், இயக்குநர்களும் மதித்தார்கள்.... ஆனால் இன்று....?

நீங்கள் மிகச்சிறந்த கதை ஆசிரியர்கள், திரைக்கதை ஆசிரியர்கள், இயக்குநர்கள் என்று போற்றும் நேற்றைய ஜாம்பவான்கள் தங்களுடைய கதைகளில் காட்சி சொல்ல, திரைக்கதையை மாற்ற, கதை பேச என ஒரு குழுவை தங்களோடு வைத்திருந்தனர். அதனால், அவர்களது புகழ் ஓங்கவில்லையா?

அப்படி வெற்றிக்காக இயக்குநர்களுடன் இணைந்து தங்கள் திறமையை காண்பித்த கதை ஆசிரியர்கள், துணை இயக்குநர்களே அடுத்தடுத்து அப்போது இயக்குநர்கள் ஆனார்கள்.

கதை பேசினால் 100% சதவிகிதம் வெற்றி கிடைக்குமா?

கட்டாயம் வெற்றி வாய்ப்பை அதிகரிக்கும். மூலக் கதை தான் அதை தீர்மானிக்கும்.

கதை பேசுபவர்கள் எல்லா வற்றையும் சரி செய்வார்களா?

ஆம், அதில் ஒருவர் லாஜிக் பார்ப்பதில் விடாக்கொண்டராக இருப்பார். அவருக்கு தவறு மட்டுமே தெரியும். அடுத்தவர் பேசும் கதைக்கு உகந்த




ஏற்கனவே வந்த படங்கள், காட்சிகள், பேசும் கதைக்கு ஏற்ப உள்ள புத்தகங்கள், பொது அறிவு தகவல்கள் என்று கூறுவார். இன்னொருவர் சமூக அரசியல் நன்கு பேசுவார். இன்றைய நாட்டு நடப்பை உதாரணங்களோடு சொல்வார். மற்றவர் அதை வைத்து அழகான புதிய காட்சி ஒன்றை சொல்வார். அதை மறுத்து அதை விட சிறப்பாக இன்னொரு காட்சியை வேறொருவர் சொல்வார். சகலகலா வித்தகராக ஒருத்தர் இருப்பார். ஆனாலும், எல்லோரும் தாங்கள் master ஆக இருக்கும் ஏரியா மட்டும்




பேசாமல்,எல்லாவித பங்களிப் பையும் கதை விவாதத்தில் தருவர்.

ஆனால், விவாதத்தில் கிடைக்கும் வைரத்தில் எது தன் கதை மகுடத்தை நேர்த்தியாக அலங்கரிக்கும் என இயக்குநருக்கு தெரிய வேண்டும். அந்த ஞானமே சொல்லப்படும் நல்ல காட்சியை, லாஜிக்கான கேள்வியை புரிந்து தன் கதையை சரி செய்து கொள்ள இயக்குநருக்கு உதவும்.

தனக்கு எது தேவை என்ற அறிவும், தெளிவும் அந்த இயக்கு நருக்கு கட்டாயம் தேவை. இல்லையேல், தவறான திசைக்கு கதை சென்று விடும். கதையின் உட்பொருளை, உயிர் மூலத்தை அறிந்து அதனை நோக்கிய பயணமாக கதையை நகர்த்துவதே சிறந்த திரைக்கதையை உருவாக்கும்.

சரி, நல்ல கதைன்னா என்ன?

நாம புதுசுன்னு எதை நம்புகி றோமோ,எது எடுத்தால் ஓடும் என்று எண்ணுகிறோமோ, அதுவே நல்ல கதை. ஆனால் நமக்கு புதுசா தோன்றகிற ஒரு கதை மத்தவங்களுக்கு பழசா தோன்றுகிறதே, அது ஏன்?

பெரும்பாலும் மத்தவங்களுக்கு தோன்றகிற மாதிரி அல்லது அவங்க ஏற்கனவே பார்த்த மாதிரியான கதைய நாம யோசிக்கிறோம், ரசிகர்கள் ஏற்கனவே பார்த்த காட்சியை எழுதிட்டு அதை புதுசுன்னு நம்ப றோம்ன்னு அர்த்தம். ஆனா அது பழசுன்றது நிஜம், அதை ஒத்துக்காம படம் எடுத்து தான் பலரும் தோற்கிறார்கள். என்றாலும் சில விதிவிலக்கு இதில் உண்டு.

கதை எழுதுறவரோட உள் உணர்வு என்று ஒன்று இருக்கும். அது கதையில் இடம்பிடிக்கிற அரிதான பிரச்சினையையோ, மெல்லிய பிரச் சினை யையோ புதுசுன்னு நம்புவாங்க.

எல்லாரும் வழக்கமான முடிவை, பெரும்பாலானவங்க யோசிக்கிற முடிவை தன்னோட கதையில வைப் பாங்க.

ஆனால் சில இயக்குநர்கள் அதை வேறு மாதிரி யோசித்து புதிய முடிவை தன் கதைக்கு வைப்பார். அப்படி க்ளைமேக்ஸ மாத்தி யோசிச்ச நிறைய படங்கள் இருக்கு... அந்த 7 நாட்கள், புதுவசந்தம், பூவே உனக்காக, லவ் டுடே, பாரதி கண்ணம்மா, வெண் ணிலா கபடிக்குழு, மைனா என இன்னும் நிறைய படங்கள் இது போல் இருக்கு.

ஒரு படத்தோட போஸ்டர்ல நாயகன், நாயகிய பாக்கும்போதே இவங்க ரெண்டு பேரும் தான் ஜோடி என ரசிகர்களுக்கு நன்கு தெரியும். இந்த கதையில இவங்க எப்படி லவ் பண்றத காட்டப்போறாங்க, எப்படி சேரப் போறாங்க, இவங்களுக்கு இடையில என்ன பிரச்சினை வரப் போகுதுன்றதை தான் ரசிகர்கள் எதிர் பார்த்து தியேட்டருக்கு வருவாங்க.. அதையே ஆரம்பக்காட்சியா ஆரம்




பிச்சா எப்படி இருக்கும். இந்த கதை யோட ஹீரோ இவன், ஹீரோயின் இவள், இவங்க ரெண்டு பேரும் தான் சேரப்போறாங்க... எப்படி சேரப் போறாங்கன்னு பார்ப்போம். let's start the story... ன்னு ஒரு இயக்குநர் ஆரம்பிச்சி screenplayயில விளையாடு னாருங்க. படம் சூப்பர் ஹிட்.. அந்த இயக்குநர் SJ.சூர்யா.. படம் குஷி. கதையில ஹீரோ ஹீரொயினுக்கு இடையிலான ஈகோ, பொய் கோபம், பொறாமை, சந்தேகம் இதை கதையோட பிரச்சனையா மாத்தி இருந்தாரு. அதே screenplayவ கொஞ்சம் மாத்திப்போட்டு ஜெயிச்சாரு சுப்பிர மணியம் சிவா "திருடா திருடி". சமீபத்துல அதே பார்முலாவுல ஜெயிச்சது பிரதீப் ரங்கநாதனோட " லவ் டுடே". இதே கதையில் ஜஸ்ட் மிஸ்ஸான படம் சச்சின்.

படத்தை தொடங்கி 20 நிமிஷம் ஹீரோயின் செத்துப் போறாங்க. பொணத்த தூக்கிட்டு ஹீரோ சுத்து றான்னு சொன்னா படம் ஓடுமா? யாராவது பார்ப்பாங்களா?... பாத் தாங்களே...படம் சூப்பர் ஹிட் ஆச்சே... பி.வி.பிரசாத் இயக்கி, சன் பிக்சர்ஸ் வெளியிட்ட முதல் படம் " காதலில் விழுந்தேன்". படத்தோட திரைக்கதையின் 80 சதவிகிதத்துல தான் ஹீரோயின் இறந்துட்டா, ஹீரோ அவ மேல இருந்த அதீத அன்புல அவ உயிரோட இருக்கிறதா நெனச்சி, அவ பிணத்தோட அலையிறான்னு ஆடியன்ஸ்க்கு தெரிய வரும். அதுதான் அந்த படத்தோட வெற்றி. அந்த screenplayயின் வெற்றி.

ஒரிஜினல யாரும் திருட முடி யாதுங்க. ஒருத்தர் உங்க கதையை தெரிஞ்சோ இல்ல தெரியாமலோ படமா எடுத்துட்டாக்கூட நீங்க உங்க கதையை தைரியமா படமா எடுத்து ஜெயிக்கலாங்க, ஏன்னா அவர் எடுத்தது அவர் படம். நீங்க எடுக்கிறது உங்க படம். ஆனால், அந்த கதை, திரைக் கதை நல்லா இருக்கனும். அப்படி ஜெயிச்சதுக்கு உதாரணம் "காதல் கோட்டை" திரைப்படம். அதோட another version "காலமெல்லாம் காதல் வாழ்க"... இரண்டுமே சூப்பர் ஹிட்." அதுமட்டுமல்ல சிறந்த தமிழ்ப் படம், சிறந்த இயக்குநர், சிறந்த திரைக்கதை ஆகிய மூன்று தேசிய விருதுகள் "காதல் கோட்டை" திரைப்படத்திற்கு கிடைத்தது.

குறிப்பாக தேசிய விருதுகள் கொடுக்கப்படத் தொடங்கி 44ஆண்டு களுக்குப் பிறகு முதல் முறையாக ஒரு தமிழ்த் திரைப்படத்துக்குச் சிறந்த இயக்குநர் விருது கிடைத்தது. அந்த விருதை வென்ற முதல் தமிழ் இயக்கு நர் அகத்தியன்.

அதே மாதிரி ஒரே கதை, நாணயத்தின் மறுபக்கம் போல, இயக்குநர்களோட பார்வை மாறி, மேக்கிங் மாறி ஜெயிச்சப் படங்கள்,




"பயணங்கள் முடிவதில்லை" & "வாழ் வே மாயம்" மற்றுமொரு உதாரணம் "வானத்தைப் போல " & "ஆனந்தம் ".

ஒரேமாதிரிகதையில் ஒன்று தோற்று மற்றொன்று ஜெயித்ததும் உண்டு. "பூவெல்லாம் கேட்டுப்பார்" & "ஜோடி" .

படத்தின் நடுவுல வழக்கமான முடிவை மாற்றி, அதை க்ளைமேக்ஸில் உணர்த்தி மெய்சிலிக்க வைத்தப் படம் "காதலுக்கு மரியாதை". படத்துல வீட்டை விட்டு ஓடிப் போன காதலர்கள் தங்களை, தங்கள் காதலை, பெற்றோரை பற்றி சுய பரிசீலனை செய்வார்கள். தங்கள் பெற்றோரின் அன்பை மீறி ஓடி வந்து திருமணம் செய்துகொள்ள வெண்டுமா? என்று திருமணம் செய்து கொள்ளும் முன் யோசிப்பார்கள்.




தங்களை நேசித்த பெற்றொரின் மனதை புண்படுத்திவிட்டு நம் முகத்தில் மட்டும் புன்சிரிப்பை எப்படி வைத்துகொள்வது என காதலர்கள் கல்யாணம் செய்து கொள்ளாமல் அவரவர் வீடுகளுக்கு செல்வதென முடி வெடுப்பார்கள். இது தான் அந்த கதையின் உயிர்நாடி.

இது தான் கதையின் உயிர் நாடி என்ற உள் உணர்வுடன் கதை ஆசிரியரால் நம்பப்பட்ட இடம். அவ்வாறு வித்தியாசமானதிருப்பத்தை உள் உணர்வு புரிதலாக கொண்டு எழுதப்பட்ட திரைக்கதையும், அதன் க்ளைமேக்சும் பார்வையாளர்களை எப்போதும் அசத்தும். " காதலுக்கு மரியாதை" படம் முடிந்ததும் தியேட்டரில் அத்தனை ரசிகர்களும் எழுந்து கைத்தட்டினார்கள்.

ஆனால், தன் உள்ளுணர்வு தடுத்தும், பிறர் சொன்னதை சூழ்நிலைக் காரண மாகவோ, குழப்பத்தின் காரணமாகவோ முடிவாக ஏற்றுக் கொண்டதால் just miss ஆன படங்களும், இயக்குநர்களும் உண்டு. அந்த மாதிரி சம்பவத்தை ஒப்புக் கொண்ட இயக்குநரும் உண்டு.

உதாரணம் "சில்லுன்னு ஒரு காதல்" திரைப்படம். தான் விரும்பிய, தன் உள் உணர்வு சொல்கிற காட்சியின் ஒகே டேக்கை முக்கியமான இடத்தில் வைக்காமல், பலரும் ஆதரித்ததால் வேறொரு டேக்கை படத்தில் வைத்ததால் ஏற்பட்ட பின்னடைவு குறித்து அதன் இயக்குநர் திரு. கிருஷ்ணா அவர்கள்,ஓர் பிரபல இதழின் இணைய தள நேர்காணலில் வெளிப்படையாக பேசியுள்ளார்.

அதே மாதிரி திரைப்படத்திற்கு நல்ல வசனம் முக்கியம். ட்ரெயிலர்ல வர ஒரே ஒரு டயலாக் கூட ஆடியன்ஸ தியேட்டருக்கு கூட்டிட்டு வரும்ங்க...

உதாரணமா, "பாஸ் என்கிற பாஸ்கரன்" படத்தோட ட்ரெயிலர்ல ஆர்யாவும் சந்தானமும் மொட்டை ராஜேந்திரன் கிட்ட கடன் கேட்டுட்டு திரும்பி வருவாங்க..ஆர்யா கேட்பார், "என்னடா மச்சான் கடன் வாங்க இவ்வளவு அலைய வேண்டி இருக் கேன்னு " , அதுக்கு சந்தானம்," விட்றா மச்சான், கடன வசூல் பண்ண அவன் நம்ப பின்னாடி அலையப் போறான் "என்பார். ட்ரெயிலரப் பார்த்து சிரிக்காத ஆளே இல்ல.




தியேட்டர் *houseful* ஆச்சி... படத்துலயும் ஆடியன்ஸ் எதிர்பார்த்த நகைச்சுவை காட்சிகள் சரியான இடத்தில் இருந்தது. படம் பெரிய ஹிட்.

நல்ல கதை,திரைக்கதை, வசனம் ஜெயிக்கும்றதுக்கு பல உதாரணங்கள் சொல்லலாம்.

பல படங்களில் ஜெயிச்ச இயக்குநர்கள், கடைசியா வந்த படத்துல தோற்றுப்போவதற்கு காரணம் கதையில் கோட்டைவிட்டது தான். தொடர்ந்து ஓரிரு படங்கள் ஹிட் ஆனதும் நாம சொல்றது எல்லாமே சரி, ஆடியன்ஸ் அதை அப்படியே ஏத்துக்குவாங்கன்னு நினைச் சிடறாரு... அல்லது அடுத்தடுத்து பெரிய ஹீரோக்களின் கால்சீட் கிடைச்சதால கதை பண்ண நேரம் இல்லாம, அரை குறை கதையோட சூட்டிங் போயிடறார். எப்பவுமே கதைய புதுசாக்கனும்னா மெனக்கெடனும்.

அப்போ புதுக்கதைன்னா என்ன?

அதிகம் பகிரப்படத பிரச்சினைகளை சொல்வது, திரைக்கதையில் புதிய யுக்திகளை கையாள்வது. புது கதையை பழைய யுக்தியில் சொல்வது, பழைய கதையை புதிய யுக்தியில் சொல்வது, இதுவே புதிய திரைப்படத்தின் வெற்றிக் கதைன்னு சொல்லலாம்.

ஒரு ஸ்கிரிப்ட் ரெடி, பவுண்டெட் ரெடி, அப்புறம் எதுக்கு கதை விவாதம் என இயக்குநரும் தயாரிப்பாளரும் நினைக்கலாம்.

கதை விவாதம் செய்யறது வீண் செலவுன்னு நினைக்கலாம். ஆனால், வீண் செலவை தடுக்க கதை விவாதம் தான் துணை புரியும். நிறைய தேவையில்லாத காட்சிகளை படம் பிடிச்சிட்டு வந்து எடிட்டிங் டேபிளில் கட் பண்ணி தூக்கி எறிவதை விட, டிஸ்கஷன் டேபிள்ல கட் பண்ணி தூக்குறது செலவைக் குறைக்கும்.

தன் மேல், தன் கதை மேல் நம்பிக்கை வைத்திருக்கிற யாரும் கதை விவாதம் செய்ய பயப்பட மாட்டாங்க.

கதை திருடு போயிடும் என்று பயப்பட தேவையில்லை. கதையின் *first version* தயாரானதுமே அதை சென்னையில் உள்ள தென்னிந்திய எழுத்தாளர்கள் சங்கத்திலோ, மும்பையில் உள்ள SWA எனும் அமைப்பிலோ, டெல்லியில் உள்ள மத்திய அரசின் *Register of copyrights* எனும் அமைப்பின் மூலமோ பதிவு செய்வது அவசியம்.

ஏங்க! தமிழ் சினிமா இளைஞர் கள் கையில் இருக்கு, நீங்க அனுப வம் வாய்ந்த இணை, துணை இயக்குநர்கள்னு 40+ வயசானவங்களை சொல்றீங்க? என ஒரு சிலர் விவரம் தெரியாமல் கேட்கிறார்கள். ஏன்னு கேட்டா, இளைஞர்கள் புதுசா சிந்திப்பாங்க என்கிறார்கள்.

உண்மைதான்.. இந்த காலத்து பசங்க, 2k கிட்ஸ் நண்பர்கள்/காதலர்களுக்குள் பேசிக்கொள்கிற சிறிய மாறுபட்ட வார்த்தைகள், பழக்கவழக்கங்கள், மனநிலையை அறிய அவர்கள் அவசியமே. புதிய சிந்தனைகள் வரவேற்கப்பட வேண்டிய ஒன்றே. சாதனைக்கு வயதில்லை. சிறியவர்களில் ஒரு சிலரும் சாதிக்கத் தானே செய்கிறார்கள்.

என்ன! டேட்டிங், பெஸ்ட்டி, கேர்ள் பிரண்டு, அங்கிள் ஜோக், பூமர், 2கே என சில வார்த்தை மற்றும் பழக்க வழக்கங்கள் சிலருக்கு தெரியாமல் இருக்கலாம். இவை இக்கால படத்தின் வெற்றிக்கு எத்தனை சதவிகிதம் உதவும். இதை ஓரிரு இளைஞர்களை உடன் வைத்துக்கொள்வதால் சரி செய்துவிடலாம்.

இதற்காக அனுபவம் வாய்ந்த இணை, துணை, உதவி இயக்குனர்களை வைத்துகொள்ள வேண்டாம் என்று தயாரிப்பாளரும், இயக்குநரும் நினைக்ககூடாது. அவர்களின் அனுபவங்கள்தான் திரைகதையை முழுமையாக்கி, திரைப்படத்தை வெற்றி பெற வழி வகுக்கும்.

சரி. சமீபத்தில் ஓடிய லிப்ட், லவ் டுடே, போர்த்தொழில், டாடா, குட் நைட், சித்தா, இறுகப்பற்று இதெல் லாம் புது சிந்தனையா, புதுசு மாதிரி யான பழசு. மிகச் சரியாக புதிதாக்கப் பட்டவை.★ஒன்று பிரச்சனை புதிது - சொல்லும் வழி பழையது அல்லது பிரச்சனை பழையது - சொல்லும் வழி புதிது★, இது தாங்க சரியான வெற்றிகரமான சினிமாவுக்கான பாதை.

ரசிகர்கள், “புதுசா சொல்ல முடியலன்னாலும் பரவால்ல, புதுசு மாதிரி சொல்லு” என்று தான் கேட்கிறார்கள். ஆனால், அதை செய்வது எளிதல்ல. எல்லா கடையிலும் இட்லி சாம்பார் இருக்கும்.சில கடையில் மட்டும் கூட்டம் ஏன்? ருசி + சுத்தம். இதுவே காரணம்.

ருசியான கதையும், நேர்த்தியான (சுத்தம்) காட்சியமைப்பும், மிக சிறப்பாக இருந்தால், கூட்டம் வரும்.

நம்ம முதுக நாம பாக்க முடியாத போது நம்ம கதையோட முதுக பார்க்கிற இன்னொரு சிசிடிவி கேமரா தான் கதை விவாதம். உங்கள அறியாம கதையிலிருந்து நீங்க விலகி இருந்தீங்கனா, அதை உணர்த்தி புரிய வைத்து நீங்க ஏத்துக்கிட்டதும் அதை சரி பண்ணி கொடுக்கிறது தான் கதை விவாதத்தோட வேலை.

அப்போ நீங்க கதை பேசுனா படம் பெரிய ஹிட் ஆயிடுமா அப்படின்னு நீங்க கேட்கலம். கண்டிப்பா ஒண்ணு நிச்சயம், பிளாப் ஆக வேண்டிய படம் தப்பு பண்ணாத படமா மாறும்.... சுமாரான படமா இருந்தா நல்ல திரைக்கதை உள்ள படமா மாறும். ஒரு வெற்றி படமா இருந்தா அது மிகப்பெரிய வெற்றி படமா மாறும்...

SO, சினிமா வெற்றிக்கான பார்முலா: கதை(*story*) + திரைக்கதை (*screenplay*) + இயக்குதல் (*Execution*) = வெற்றி (*success*)



கட்டுரையாளர் என்.ஏகம்பவாணன்
எழுத்தாளார், பாடலாசிரியர் & இணை இயக்குநர்.

9940074009
இணைச் செயலாளர் தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கம்






தமிழ் அகம் ஒரு நடுநிலை ஊடகம்
தொடர்புக்கு : 9467 208 208

Owned, Published, and Printed by **R.SUBRAMANIYA BHARATHI.** Printed at **CHENNAI OFFSET PRINTERS**, No, 19/1, 21/2, Kithabath Khan Bahadhur Street, Ellies Road, Chennai- 600 002 and Published from No. 41/14, F3, Loganathan Nagar, 2 nd Street, Choolaimedu, Chennai-600 094. **Editor: R.SUBRAMANIYA BHARATHI**. Mobile: **9566153766, E-mail: thiraimozhinews@gmail.com**